## விடைகள்

| பகுதி – I | | | |
|---|---|---|---|
| 01.) 2 | 11.) 1 | 21.) 2 | 31.) 2 |
| 02.) 1 | 12.) 1 | 22.) 2 | 32.) 1 |
| 03.) 1 | 13.) 2 | 23.) 2 | 33.) 1 |
| 04.) 2 | 14.) 3 | 24.) 4 | 34.) 3 |
| 05.) 1 | 15.) 1 | 25.) 2 | 35.) 1 |
| 06.) 1 | 16.) 3 | 26.) 1 | 36.) 2 |
| 07.) 1 | 17.) 1 | 27.) 2 | 37.) 3 |
| 08.) 1 | 18.) 4 | 28.) 2 | 38.) 1 |
| 09.) 2 | 19.) 1 | 29.) 1 | 39.) 3 |
| 10.) 4 | 20.) 1 | 30.) 2 | 40.) 1 |

The National e-learning Portal for The General Education

## பகுதி II

**01.**

1. தேசத்தின் மீது அன்பு வைத்தல், தேசத்துக்காகப் பிரார்த்தித்தல், தேசத்துக்கு வசுவாசமாக நடத்தல், சுதேச மொழிகளைக் கற்றல்
2. ஆதாரப் பூர்வமானவை, பொது நலன்பேணல், நம்பகத்தன்மை, பண்பாடு பேணல், நடுநிலை தவறாமை
3. இறை கட்டளை என்ற வகையில் நன்மை கிடைக்கின்றது.
   பெண் கர்ப்பம் தரித்திருப்பின் அதனை அறிந்து கணவனை நிச்சயித்துக் கொள்ள வாய்ப்பாகின்றது.
   தலாக் ரஜஈ ஆயின் மீண்டும் சேர்ந்து வாழ்வதற்கான அவகாசம் கிடைக்கின்றது.
4. குர் ஆன் வசனம்:- நிச்சயமாக நாம் இதற்கு முன்னர் உலகில் எமது குடும்பத்தாருடன் இருக்கும் போது மறுமை குறித்து அஞ்சியவர்களாக கொடிய வேதனையிலிருந்து நம்மையும் நம் குடும்பத்தையும் காப்பாற்றினான். (52 அத்தூர் 26-27)
   ஹதீஸ் :- அன்பு செலுத்துவது போலவே குடும்பத்திற்குத் தாராளமாகச் செலவு செய்பவராக நல்ல தந்தை காணப்படுவார். அவர் ஒரு போதும் மனைவி பிள்ளைகளுக்குச் செலவு செய்வதில் கஞ்சுத்தனம் காட்ட மாட்டார். மனிதன் செலவிடும் தீனார்களில் மிகச் சிறந்தது தனது குடும்பத்தினருக்குச் செலவு செய்யும் தீனார் ஆகும். ( புவராரி)
5. ஏமாற்று, பொய்ச் சத்தியம், பதுக்கல், வட்டி
6. விளையாட்டு மைதானம் அமைத்தார்.
   உதைப்பந்தாட்டம், நக்பி, குத்துச்சண்டை, கிரிக்கெட் போன்ற விளையாட்டுக்களை அறிமுகம் செய்தார்.
7. ரீ.பி.ஜாயா, சித்திலெப்பை

8. அப்துர் ரஹ்மான் இவ்னு முல்ஜிம் எனும் காரிஜியீன்
9. துணிவு, வீரம்
10. அல்குர்ஆனைத் தொகுத்து நூலுருப்படுத்தியமை.

 ஸக்காத் வழங்க மறுத்த கூட்டத்தின் சூழ்ச்சியை முறியடித்தமை.

 பொய் நபிமார்களின் சவால்களை அனுபவிக்க தளபதிகளின் பங்களிப்புடன் முறியடித்த சிலாபத்தின் பலத்தை நிரூபித்தமை.

 அரசியல் அனுபவமிக்க பல கவர்னர்களை நியமித்து நிர்வாகத்தை ஸ்திரப்படுத்தியமை.

**02.** பொருத்தமான விடைக்குப் புள்ளியிடுக.

**03.**

1. ஒருவர் பின் ஒருவராக நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் இரு பெண்மகளைத் திருமணம் செய்து அவர்களுடன் சிறப்பாக வாழ்க்கை நடத்திய காரணத்தால் இவர் "துன்னூறைன்" என அழைக்கப்பட்டார்.
2. முஜ்தஹித்கள் தக்வாவும் நன்னடத்தையுமுள்ள முஸ்லீம்களாக இருத்தல் வேண்டும்.

 அறபு மொழியில் பாண்டித்தியம்

 அல்குர் ஆன் ஸீன்னாவில் ஆழமான அறிவு

 முன்னைய முஜ்தஹித்களின் இஜ்திஹாத் பற்றிய விளக்கம்
3. ஹதீஸ் கற்றல், கற்பித்தலுக்கென சில சஹபாக்களை நியமித்தார்கள்.

 அஸ்ஹாபுஸ் ஸீப்பாக்களை பயன்படுத்தினார்கள்.

 ஹதீஸ்களை திருத்தமாக மனைமிடச் செய்தார்கள்.

 எழுதி வைத்துப் பாதுகாத்தார்கள்.

**04.**

1. அல்குர்ஆன், ஹதீஸ்
2. இப்றஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்களின் வாழ்வில் சுட்டெரிக்கும் நெருப்பு, சாந்தியளிக்கும் குளிராக மாறியமை.

 இலை தழைகளைப் பறிப்பதற்குப் பயன்படுத்திய மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களின் கைத்தடி பாம்பாக உருமாறியமை.

 கருங்கற் பாறையிலிருந்து ஒட்டகம் வெளியாகியமை ஸாலிஹ் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் கால அற்புதம்.
3. தவக்குதல் :- தவக்குதல் என்பதன் மொழிக் கருத்து பொறுப்புச் சாட்டுதல் என்பதாகும். இது முயற்சி, அல்லாஸ்வின் மீதுள்ள நம்பிக்கை ஆகிய இரண்டினதும் சேர்க்கையாகும். ஆகவே தான் இஸ்லாமிய வழக்கில் எமது முயற்சிகளின் முடிவை அல்லாஹ்விடம் பொறுப்புச் சாட்டுதல் தவக்குதல் எனப்படுகின்றது.

 ஸ்ப்ர் :- ஸ்ப்ர் என்றால் பொறுமை என்று பொருள்படும். அவசரம், கோபம், பதட்டம், பேராசை, பழிக்குப் பழி போன்ற தீய குணங்களை அடக்கும் ஆற்றல் கொண்ட பலம் பொருந்திய உயர் பண்பே பொறுமையாகும்.

 ரிழா :- ரிழா என்பதன் மொழிக்கருத்து அறிவு பொருந்திக் கொள்ளல் என்பதாகும். அல்லாஹ்வின் ஏற்பாட்டின் படி அமையும் அனைத்து நிலைகளையும் பொருந்திக் கொண்டு மனத்திருப்தியடைவதற்கே ரிழா என்று சொல்லப்படும்.

 ம.ஃ.ரிபா :- ம.ஃ.ரிபா என்பதன் மொழிக்கருத்து அறிவு என்பதாகும். இஸ்லாமிய ஆன்மீகப் பரிபாசையில் இரட்சகனாகிய அல்லாஹ்வைக் கண்ணால் காண்பது போன்று அறிவதன் மூலம் உளப் பேரின்பம் அடைவதைக் குறிக்கின்றது.

**05.**

1. நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அடக்கம், பணிவு, மென்மை, போன்ற நற்பழக்கங்களுக்கு உயர்ந்த முன்மாதிரியாகத் திகழந்தார்கள். தெருவோரமாக விளையாடிக் கொண்டிருந்த சின்னஞ்சிறார்களைக் கண்டால் கூட அவர்களுக்கு ஸலாம் கூறி, அவர்களை மகிழ்வித்துப் புன்னகை புரிவதற்கு நபி எனும் அந்தஸ்து அவர்களுக்கு எற்தவொரு சந்தர்ப்பத்திலும் தனியாக இருக்கவில்லை.

2. மு∴மினானவன் தனது நல்லொழுக்கத்தின் மூலம் நோன்புடன் நின்று வணங்கும் வணக்கவாளியின் நன்மையை அடைந்து கொள்கிறான். (அபூ தாவூத்)

நபி ஸல்லல்லாஹீ அலைஹி வஹஸல்லம் அவர்கள் கூறினார்கள். நல்லொழுக்கமும் நம்பிக்கையும் ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்தவையாகும். ஒன்றை விட்டு விடுபவன் அடுத்ததையும் விட்டு விட வேண்டியதுதான்.

3. இஹ்ராம் :- பர்ளுகளின் இஹ்ராம் அணிவது ஒன்றாகும். ஒருவர் இஹ்ராம் அணிய முன்னர் நகம் வெட்டி உரோமம் கலைந்து, குளித்து, மணம் புசி, நிய்யத்து வைத்து இரண்டு ரக்சுத்துக்கள் ஸீன்னத் தொழுகையே நிறைவேற்ற வேண்டும். ஆண்கள் தைக்கப்படாத வெண்மை ஆடை அணிய வேண்டும். பெண்கள் இஸ்லாம் அங்கிகரித்த ஆடையை அணியலாம். இஹ்ராம் தரித்த பின் ஹஜ், உம்ராவின் போது தடைசெய்யப்பட்டவைகளில் ஏதேனும் ஒன்றை செய்தால் பித்யா கொடுக்கப்பட வேண்டும்.

மிக்காத் :- மிக்காத் என்பது ஹாஜிகள் ஹஜ்ஜீக்காக நிய்யத்து வைக்கும் இடமாகும். ஒவ்வொரு நாட்டினரும் ஒவ்வொரு இடங்களில் நிய்யத்து வைப்பர் இலங்கை ஹாஜீகள் யலம்லம் என்ற இடத்தில் நிய்யத்து வைப்பர்.

**06.**

1. ஹஜ் :- இதனை நிறைவேற்றத் திட்டவட்டமான காலம் உண்டு.
செல்வந்தர்கள் இதனை நிறைவேற்றுதல் கடமையாகும்.

உம்ரா :- திட்டவட்டமான காலம் இல்லை.
போதியளவு பாணம் இருப்பின் எவரும் இதனை நிறைவேற்றலாம்.

2. நோன்பளிக்கும் இரு சந்தோசங்கள் உள்ளன. ஒன்று நோன்பு நிற்க்கும் போது அடையும் சந்தோசம் மற்றையது தன் இரட்சனனை சந்திக்கம் போது அடையும் சந்தோசம் (புஹாரி, முஸ்லீம்) யார் ரம்ழானில் ஈமானுடனும் அல்லாஹ்விடத்தில் கூலியை எதிர்பார்த்த நிலையிலும் நோன்பு நோற்கிறாரோ இவரது பாவம் மன்னிக்கப்படுடம். (புஹாரி, முஸ்லீம்)

3. ஏழைகளின் சுயமரியாதை பாதுகாக்கப்படுகின்றது.
கவனிக்கப்படவேண்டிய அனைவரையுமே கவனித்தும் கொள்ளலாம்.
சமூக நலனைப் பாதுகாக்கும் பணிகளிலும் கவனம் செலுத்த முடிகிறது.

**07.**

1. அருட்கொடைகளை உணர்த்துதல்
உடல் ஆஆரோக்கியம் கிட்டல்
ஆன் மிக விருத்தி

2. அஸ்வதுல் அன்ஸி

முலைலமா

துலைஹா

ஸஜாஹ்

3. முர்த்த என்பது மதம் மாறியவரைக் குறிக்கின்றது.

தவ்பா செய்யாத நிலையில் இவர் மரணித்தால் இவருக்காக தொழுகை நடத்தப்படமாட்டாது. முஸ்லீம் மைய வாடியில் இவர் அடக்கம் செய்யப்படவும் மாட்டார். முஸ்லீம் சமூகம் இவரை ஒரு சமயத்துரோகி போன்றே நடத்தும்.

**08.**

1. இல்ஹாத்

குப்ர்

ஸிரக்

ரித்தத்

2. அல்லலாஹ் தான் அனைத்துப் பொருட்களையும் படைப்பவன் இன்றும் அவனே எல்லாப் பொருட்களின் பாதுகாவலும் ஆவான். வானங்களினுடைய பூமியினுடையவும் சாவிகள் அவனிடமே இருக்கின்றது.

அவன் தான் உங்கள் அல்லாஹ் உங்கள் இறைவன் எல்லாப் பொருட்களையும் படைப்பவன். அவனைத் தவிர வேறு நாயன் இல்லை. எனவே நீங்கள் (சத்தியத்தை விட்டும்) எங்கு திருப்பப்படுவீர்கள்.

3. மலக்குகள் :- அல்லாஹ் மலக்குகளை ஒளியினால் படைத்துள்ளான். அவர்களின் எண்ணிக்கையை அல்லாஹ் மட்டும் அறிவான் அவர்கள் பல்வேறு பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர். அவர்களுள் ஜிப்ரல் (அலை) முதன்மையானவராவார். அவர்கள் அல்லாஹ்வின் கட்டளைப்படி அடியார்களின் நலன்களைக் கவனித்த வருகின்றனர். அல்லாஹ்வின் படைப்புக்களில் ஸைத்தான்களும், ஜின்களும் அடங்குகின்றன.

முஹம்மது ஸல்லல்லாஹீ அலைஹி வஸல்லம் :- அல்லாஹ் ரிஸ்லத்தின் மூலம்அடியார்களுக்கு பல ஏவல்களையும் விளக்கங்களையும் வழங்கியுள்ளான். நபி (ஸல்) அவர்களிடமே அவர்களின் தோழர்களிடம் இருந்து வழியில் இருப்பவர்கள் தான் சுவனவவாசிகள் எனலாம்.

பாவம் :-பெரும் பாவதத்தில் ஈடுபட்ட முஸ்லீம் பாவியாவான். ஆனால் காபிரல்ல அவன் நரகம் நுழைந்தாலும் நிரந்தரமாக அங்கு தங்க மாட்டான். பாவங்கள் செய்த முஸ்லீமை (மு.ஃ.மீனை) அல்லாஹ் நாடினால் மன்னித்து சுவனம் நுழைவிப்பான்.சூ

வலிமார்கள் :- இறை நேசர்களள் வலிமார்கள் எனப்படுவர். அல்லாஹ்வுடனான அவர்களது நெருக்கத்திற்கேற்ப அவன் நாடியவர்களுக்கு விசேட அந்தஸ்தை வழங்குகின்றான்.